28.11.2023 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 204/2018 ) சந்திரராஜ்.

<u>1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலம் தயார் செய்வதற்கு யார் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது. வேப்பங்குளம் ஜவகர் விவசாய நல சங்கம் என்பது ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் என்றால் சரிதான். வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சங்கத்தின் பதிவு எண் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆவணத்தில் உள்ளது. வா.சா.ஆ.10 நான் தாக்கல் செய்யப்பட்டுள்ளதில் சங்கத்திற்குரிய பதிவு எண் மற்றும் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இதில் குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.10 நான் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.10 நீதிமன்ற விசாரணையின் போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சங்கத்தின் உறுப்பினர் ஊர்காவலன் என்பவருடைய மருமகன் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்உறையை நான் படித்துப்பார்த்துள்ளேன் என்றால் சரிதான். எனது பிராதில் சங்கம் 1990 ஆம்ஆண்டு சங்கம் செயல்பாடுகள் முடிந்து விட்டதாக சொல்லியுள்ளேன் ஆனால் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) 05.12.2017 ம்தேதி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு சங்கத்தின் தீர்மானத்தில் எனது மற்றும் முத்தையா,கனகராஜ், மாரியப்பன் பெயருக்கு அங்கீகாரம் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்றால் பெயர் இல்லை. வா.சா.ஆ.10 ஆவணத்தில் கண்டுள்ள தேதிகளில் கூட்ட அறிவிப்பு கூட்டம் நடைபெற்ற இடம் உரல்கடை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உரல் கடை என்பது 1ம்பிரதிவாதியின் மாமனார் திரு.ஊர்காவலன் வீட்டு அருகே உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 கூட்டம் நடைபெற்ற தேதிகளில் உறுப்பினர் திரு.ஊர்காவலன் உயிருடன் இருந்த நிலையில் அவரின் கையொப்பம் பெறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.10 ஆவணம் இந்த வழக்கிற்கு பின்னிட்டு என்னால் உற்பத்தி

செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்,தலைவர், உபதலைவர், காரியதரிசி, செயலாளர், பொருளாளர், மற்றும் 25 உறுப்பினர்கள் அடங்கியவர்கள் என்று சொன்னால் சரிதான்.

3) வா.சா.ஆ.10 ல் 25 முதல் 29 நபர்கள் கையொப்பம் கண்டுள்ளதா என்றால் இல்லை குறைவான நபர்களின் கையொப்பம் கண்டுள்ளது. ஆரம்பகால உறுப்பினர்களின் பங்களிப்பு தொகையில் தான் சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 உறுப்பினர்களிடம் வருட சந்தா, வார சந்தா வசூல் செய்த விவரம் இல்லை என்று சொன்னால் சரிதான். ஜவகர் விவசாய நலசங்கம் அதன் பதிவிலிருந்து நீக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் 2 வது பக்கம் 4 பாராவில் குறிப்பிட்டுள்ளார்கள் என்று சொன்னால் கிடைக்கப்பெறவில்லை எனக்குத்தெரியாது. அந்த ஆவணத்தை வாங்குவதற்கு முயற்சி செய்தேனா என்றால் செய்தேன். மனுக்கொடுத்து தான் நகல் பெறுவதற்கு முயற்சி செய்தேன் என்றால் மனுக்கொடுத்துள்ளேன் அந்த மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, என்வசம் உள்ளது தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன்.

4) ஆரம்பகால உறுப்பினர்களில் ஒரு நபர் இறக்கும்பட்சத்தில் அவரின் வீட்டிலிருந்து கோ–ஆப்சன் நிலையில் வீட்டிற்குஒரு நபரை தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று சொன்னால் சரிதான். என் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் 6 சகோதரர்கள். அதில் பன்னீர்செல்வம் என் சகோதரர் தான்.எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் 1997 ல் இறந்துபோனார். அவர் இறந்த பின்னர் 16.12.2006 ம் தேதியில் நடைபெற்ற கூட்ட தீர்மானத்தின் அடிப்படையில் எனது சகோதரர் பன்னீர்செல்வம் நியமிக்கப்பட்டார் என்றால் தவறு. 16.12.2006 ம்தேதிய கூட்டதீர்மானத்தின்படி எனது தந்தை கோட்டியப்பனுக்கு பதில் பன்னீர்செல்வம், சாமிக்கண்ணுக்கு பதில் பாஸ்கரனும், கோவில்பிள்ளைக்கு பதில் ஏசையாவும், கோ.சாமிக்கண்ணுக்குபதில் கனகராஜும், செல்லையாவுக்கு பதில் எட்டுராஜும்

உறுப்பினர்களாக சேர்ப்பதற்கு ஏகமனதாக தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அது போல 16.01.2007 ம்தேதிய மகாசபை கூட்டத்தின்படி செல்லையா மகன் எட்டுராஜ் தலைவராகவும்,கோவில்பிள்ளை மகன் ஏசையா உபதலைவராகவும், இன்னாசிமுத்து மகன் மாடசாமி காரியதரிசியாகவும், சாமிக்கண்ணு மகன் பாஸ்கரன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டவிவரம் தெரியுமா என்றால் தெரியாது.

5) 29.07.2007 ஆம் தேதியில் சங்கம் பொருளாதார நெருக்கடியில், நிலங்களை சரிவர பராமரிக்க முடியாத காரணத்தினால் அதிலிருந்த ஆக்கிரமிப்புகளை கலைய முடியாததாலும், சொத்திற்குவிலைசாட்டி உறுப்பினர்களுக்கு அதன் மூலம் வரும் பணத்தை விகிதாச்சார முறைப்படி பிரித்து வழங்கவும் அதிகாரம்அளித்து மகாசபையில்ஒத்துக்கொண்டு ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள விவரம்எனக்குதெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி 29.07.2007 ம்தேதிய ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையல் தான் தாவாச்சொத்தினை 1,2 பிரதிவாதிகளுக்கு விலைப்பத்திரம் எழுதி கையொப்பம் செய்து ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 15.10.2007 ம்தேதி தபசில்சொத்தை 1,2 பிரதிவாதிகளுக்கு கங்கைகொண்டான் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் பதிவுசெய்து அரசு விதிகளுக்குட்பட்டு கிரையம் பதிவு செய்யப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி தெரியாது.

6) 15.10.2007 ம்தேதிய தபசில் சொத்துக்களை ஆரம்பகால உறுப்பினர்களும் அதன் பின்னர் வந்த உறுப்பினர்களும் சேர்ந்து 1,2 பிரதிவாதிகளுக்கு விற்பனை அங்கீகாரம் வழங்கிய விவரம் மற்றும் விற்பனை செய்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் அது முற்றிலும் தவறு. 15.10.2007 ம்தேதி முதல் 1,2 பிரதிவாதிகள் தாவாச்சொத்தை இடையூறு இன்றி அனுபவம்செய்து வருகிறார்கள் என்றுசொன்னால் அது தவறு. குத்தகைக்கு

விடுவதாக நினைத்துக்கொண்டேன். 1,2 பிரதிவாதிகள் 2007 ஆம்ஆண்டுக்கு பின்னர் வருவாய்துறை ஆவணங்களை பட்டா பதிவிறக்கம் செய்து தீர்வை செலுத்தி வருகிறார்கள் என்றாலும் அதை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சங்கத்தின் அசல் ஆவணங்களை எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் 4 பேர்களும் சங்கத்தில் உறுப்பினர்கள் கிடையாது என்றாலும் வழக்கு தாக்கல் செய்ய எங்களுக்கு அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

7) வேப்பங்குளம் ஜவகர் விவசாய நலசங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினர்களும் இறந்த உறுப்பினர்கள் அதை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்டு நடைபெற்ற மகாசபை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சட்ட விதிகளுக்குட்பட்டு கிரையம் பெறப்பட்டுள்ளது என்றாலும் அதில் எந்தவிதமான மோசடியோ,குளறுபடியோ நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. 15.10.2007 ம்தேதிக்கு பின்பு வேப்பங்குளம் விவசாய சங்கத்தின் செயல்பாடுகள் முழுவதும் கலைக்கப்பட்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்டுவிட்டது என்றாலும் அதற்கு பின்பு இந்த சங்கம்செயல்படவில்லை என்று சொன்னால் தவறு. 2018 ஆம் ஆண்டில் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலோ அல்லது நில அபகரிப்பு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் புகார் கொடுக்கச்சென்றோம் ஆனால் அவர்கள் வாங்கவில்லை.

8) அஞ்சல் தபால் மூலம் அனுப்பிவைத்தேனா என்றால் நாரைக்கிணறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் கூப்பிட்டு விசாரித்தார்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. நாரைக்கிணறு காவல் நிலையத்தில் புகார் ஏற்பு ரசீது எதுவும் கொடுக்கவில்லை. நாரைக்கிணறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரத்தை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.10 ஆவணத்திற்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.10 ல் கோட்டியப்பன் என்றுபோடப்பட்டுள்ளது எனது தந்தை பெயர் தானா என்றால் ஆமாம். 21.05.1995 ஆம் ஆண்டு சத்தியநாதன் குமாரர்

செல்வராஜுக்கு கிரையம் செய்து கொடுப்பதற்காக ஒரு ஒப்பந்தம் போடப்பட்ட விவரம் எனக்குத்தெரியுமா என்றால் தெரியும்.

9) அதில் எனது தகப்பனார் கோட்டியப்பன் கையொப்பம் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் எனது அப்பா இன்சியர் போடாமல் கோட்டியப்பன் என்று தான் போட்டுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ல் போடப்பட்டுள்ள கோட்டியப்பன் என்று போடப்பட்டுள்ள கையொப்பம் எனது தகப்பனாரால் போடப்படவில்லை என்றாலும் அது என்னால் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளிடமிருந்து கூடுதல் பணம் பெறவேண்டி இந்த வழக்கை ஜோடனை செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றும் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எனக்கு எவ்வித வழக்குமூலமும் இல்லை என்றால் சரியல்ல. எனது வழக்கில் 1,2 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளுக்குகிரையம் செய்து கொடுத்தாக சொல்லப்படும் தீர்மானங்கள் அனைத்திலும் 3 ம்வாதி கையொப்பம் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. சங்கத்திற்குரிய அசல் ஆவணங்கள் அனைத்தும் கிரையம்செய்து கொடுத்த காலத்தில் 1,2 பிரதிவாதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றாலும், அதனால் தான் வழக்குரை தாக்கல் செய்யும் போது அசல் ஆவணங்களை தாக்கல் செய்யமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
28.11.2023.